**செ. கு. எண்**: 236 **நாள்**: 03-07-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 3.7.2012

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மேடவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்து என்பவரின் மகன் செல்வன் ரவிசங்கர் 27.6.2012 அன்று மேடவாக்கம் - வேளச்சேரி பிரதான சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, தாம்பரத்திலிருந்து வேளச்சேரி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த ரவிசங்கர் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் காலமான செல்வன் ரவிசங்கர் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**